## ஜனவரி - 18

**"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள். கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்"**

**- ரோம 12:11**

தங்கள் ஓட்டத்தில் வெற்றிகரமாக ஓடுகின்ற யாவரும் ஆண்டவருடைய வேலையில் ஆவியிலே அனலாகவும் ஊழியத்திலே உற்சாகமுடையவராகவும் இருத்தல் அவசியம். நம்முடைய ஒன்றோ அல்லது ஒன்றிற்க்கு மேற்பட்ட தாலந்துகளை நாம் உலக கவலைகளைக் கொண்டு அந்த பாரத்தின் கீழ் புதைத்து வைத்துவிடக் கூடாது. வேறு பல கவலைகள் வந்து சூழ்ந்து கொள்ளாத விதம் பார்த்தல் அவசியம். நம் தாலந்துகளை இவைகள் வந்து புறக்கணிக்குமாறு செய்தல் கூடாது. நம்முடைய குடும்ப நலத்திற்கோ அல்லது நம் சுயநலத்திற்கோ நாம் இந்த உலக ஆசைகளுக்கு வழிவகுத்துக் கொடுக்காமல் பார்த்தல் அவசியம். நமது தாலந்துகளை இவைகள் வந்து மூடிவிடக்கூடாது. ஒருவேளை நாம் ஆண்டவருக்கு என்று செலவழிக்க தீர்மானம் கொண்ட சமயத்தை வேறுவித அலுவல்களை கடைபிடிக்க செலவழிக்க கூடாது. உதாரணத்திற்கு, அறிவியல், வேதாந்தம், சங்கீதம், கலை, அரசியல் போன்றவற்றிற்கு செலவிடக்கூடாது. அகந்தைக்காகவோ, பெரும்திண்டியிலோ சமயத்தை வீணாக்கக் கூடாது. இப்படி நம் தாலந்துகளை சரிவர பயன்படவிடாமல் பிறகாரியங்களுக்கு நம்மை ஈடுபடுத்திக் கொள்வோமெயனில் நாணயமற்ற ஊழியக்காரர்களைப்போல் நம் அனைவரும் இறுதியில் அந்தகாரத்திற்குள் போக வேண்டியது வரும்.

**- Z ’91, 9 (R 1281).**

நம்முடைய ஜீவியத்தில் உள்ள எல்லா வேலைகளும் சரிவர நடைபெற வேண்டுமென்றால் குறிப்பாக ஆண்டவருடைய ஊழியம் நிச்சயம் வெற்றிகரமாக முடிய வேண்டுமென்றால் அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருத்தல் வேண்டும். ஆவியிலே அனலாயிருந்து கர்த்தருக்கு ஊழியஞ் செய்ய வேண்டும். நாம் ஆவியிலே உற்சாகம் கொண்டு தேவனுடைய வேலையிலே ஈடுபடும்போது அதிகப்படியான வெற்றி நம்மை வந்து அடைய வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட தேவனுடைய ஊழியத்திற்கு தேவனுடைய ஞானமும் வழி நடத்துதலும் கிடைக்குமேயானால் அவர் கொண்ட நோக்கம் பலன் அளிக்கும். அப்படியே ஆண்டவருடைய ஊழியத்தில் அவருடைய ஞானத்தையும் வழிநடத்துதலின் படி நடக்கிறவர்களும் தாங்கள் அடையும் மகத்தான வளர்ச்சியை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைக்கிறது.

**-P ’33, 191.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1நாளா 29:17; 2நாளா 15:15; எஸ்றா 7:23; சங் 42:1,2; 119:139; பிர 9:10; ஏசா 62:6,7; யோவா 9:4; 1கொரி 13:3; 1கொரி 14:12; 2கொரி 4:8-10,13,16-18; 9:2; கலா 4:18; கொலோ 3:22-24; தீத் 2:14; யூதா 3; வெளி 3:19.

**கோபுர வாசிப்பு :** Z ’13, 314 (R 5334).

**வினாக்கள் :** இந்த வாரம் நான் வைராக்கியமுள்ளவனாக இருந்தேனா?
எதில்? பலன் என்ன?